SACRED HEART COLLEGE
(Autonomous)
College : (04179) 220553
Resi : (04179) 220103
Fax. : (04179) 226423
Ready for Every Godd Work
Tirupattur - 635 601, Tirupattur D t. ❖ Tamil Nadu ❖ South India
A Don Bosco Institution of Higher Education, Founded in 1951 ∗ Affiliated to Thiruvalluvar University, Vellore ∗ Autonomous Since 1987
Accredited by NAAC (4th Cycle - under RAF) with CGPA of 3.31/4 at 'A+' Grade

# 2023-2024 ஆம் கல்வியாண்டு முதல் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க மாணாக்கர்கள் தயார் நிலையில் வைக்க வேண்டிய முக்கிய பொருண்மைகள் பின்வருமாறு:

1. மாணாக்கரின் பெயர், பாலினம், பிறந்த தேதி ஆகியவை கல்வி சான்றிதழ்களில் (10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு) உள்ளவாறு ஆதாரில் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லையெனில், பள்ளி சான்றிதழ்களில் இடம் பெற்றுள்ளவாறு மாணாக்கரின் பெயர் ஆதாரில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.
2. புதியது / புதுப்பித்தல் மாணாக்கர்கள் கட்டாயம் இணையவழி மூலம் **(Online)** வருமான சான்றிதழ் (2023) மற்றும் சாதி சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும்.
3. மாணாக்கரின் பெயரில் வங்கிக் கணக்கு எண் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில், அவ்வங்கிக் கணக்கு எண் செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
4. மாணாக்கரின் வங்கிக் கணக்கில் இடம் பெற்றுள்ள பெயர், அம்மாணாக்கரின் பள்ளி சான்றிதழ்களில் உள்ளவாறு இடம் பெற்றுள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
5. மாணாக்கரின் வங்கிக் கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இணைக்கப்படவில்லை எனில் வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கான படிவத்தினை கல்லூரி அலுவலகத்தில் உள்ள **Scholarship Nodal Officer**-ரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். (இணைக்கப்பட்டுள்ளது).

(PTO)

07/08/23

Principal
Sacred Heart College (Autonomous)
Tirupattur-635 601, Tirupattur Dist.

6. **மாணாக்கரின் வங்கி கணக்கிற்கு நேரடி பலன் பரிமாற்றத்தைப் (DBT) பெறுவதற்கு மாணாக்கரின் ஆதார் எண் NPCI உடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை https://resident.uidai.gov.in/bank-mapper என்ற இணைய முகவரி மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.**
7. **மாணாக்கரின் ஆதார் எண் NPCI உடன் இணைக்கப்படவில்லை எனில் சம்மந்தப்பட்ட வங்கி மேலாளரை தொடர்பு கொள்ள அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.**
8. மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள முந்தைய வங்கி கணக்கு எண்ணை மாற்றம் செய்யப்பட வேண்டும் எனில், மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட வேண்டிய புதிய வங்கி கணக்கு விவரங்களை அவ்வங்கியின் கிளை மேலாளரிடம் சமர்ப்பிக்கும் போது கட்டாயம் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட முந்தைய வங்கி கணக்கு விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
9. **மாணவரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் கட்டாயம் பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.**
10. கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெற்றொர் / பாதுகாவலர் மத்திய / மாநில அரசின் கீழ் பணிபுரிந்தால், அவர்கள் பணிபுரியும் அலுவலரிடமிருந்து வருமான சான்றும் (Pay Slip), மேலும் வருவாய் துறையிடமிருந்து வருமான சான்றும் (Income from all source - HRA நீங்கலாக) கட்டாயம் கல்வி நிறுவனத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**2023-2024 ஆம் கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை இணையதளம் விரைவில் திறக்கப்பட உள்ளதால், மேற்கண்ட விவரங்களை மாணாக்கர்கள் தயார் நிலையில் வைக்க வேண்டி கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

நன்றி,

நாள் : 24-07-2023

SACRED HEART COLLEGE TIRUPATTUR 635 601 TIRUPATTUR DT. (AUTONOMOUS)

07/08/23

முதல்வர்
**Principal**
**Sacred Heart College (Autonomous)**
**Tirupattur-635 601, Tirupattur Dist.**